*1*

# கீழ்ப்படிதல்: இது என்ன?

*அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி (எபிரெயர் 5:8, 9).*

கீழ்ப்படிதல் என்பது மற்றொருவரின் அறிவுறுத்துதல்களுக்கு மனப்பூர்வமான பதில் செய்கை என்பதாக உள்ளது. இது *கட்டளையிடப்பட்டுள்ளவற்றைச்* செய்தல் மற்றும் கட்டளை *இடப்படாதவற்றில்* இருந்து விலகியிருத்தல் ஆகிய இரண்டையும் உள்ளடக்குகிறது. பல விஷயங்களில், கீழ்ப்படிதல் என்பது அதற்கான ஒரு காரணத்தைக் கேட்டல் அல்லது தேடுதல் என்பதாக இராமல், கேள்வியின்றிக் கேட்புகளை ஏற்றுக்கொள்ளுகிறது. விசுவாசம் (எபிரெயர் 11:8), நம்பிக்கை (1 யோவான் 3:3) மற்றும் அன்பு (யோவான் 14:15) ஆகியவை, கீழ்ப்படிதலுக்குப் பின்னால் உள்ளதான தேவன் விரும்புகிற தூண்டுதல் சக்தி களாக இருக்கின்றன.

நமது இரட்சிப்பானது, பிதாவின் சித்தத்தின்படி நாம் செய்தல் மற்றும் இயேசுவுக்குக் கீழ்ப்படிதல் (எபிரெயர் 5:9) ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. நியாயத்தீர்ப்பின் நாளில் *பலர்* முற்றிலும் திகைப்படையும்படி - *"என்னை விட்டு அகன்றுபோங்கள்"* என்ற - பயங்கரம் நிறைந்த சொற்றொடரை இயேசு பேசப்போவதாக அவர் எச்சரித்தார் (மத்தேயு 7:21-23). அவர்களை ஆக்கினைத் தீர்ப்புக்கு உள்ளாக்குதல் என்பது அவர்களைத் திகைப்படையச் செய்யும். மத்தேயு 7ம் அதிகாரத்தின் நியாயத்தீர்ப்புக் காட்சியில் சித்தரிக்கப்பட்டுள்ளவர்கள் ஒழுக்கவீனமானவர்களாக, தேவபக்தி யற்றவர்களாக, அவிசுவாசிகளாக அல்லது கர்த்தருக்கு ஊழியம் செய்வதில் குறைவுபட்டவர்களாக இருந்தவர்கள் அல்ல. அவர்கள் அவரது நாமத்தில் அற்புதங்களையும் வல்லமையான செயல்களையும் செய்திருந்ததாக நம்பினர். அவர்கள் இயேசுவுக்கு ஊழியம் செய்ய முயற்சித்தனர் என்பதைச் சாட்சியம் சுட்டிக்காண்பிக்கிறது. அவர்கள் தேவனுடைய போதனையைப் பின்பற்றுவதற்கு மாறாகத் தங்கள் சுய தேர்ந்துகொள்ளுதல்களின்படி அவருக்கு ஊழியம் செய்ய நாடினர் - என்பதே அவர்களின் பிரச்சனையாக இருந்தது, பரலோகத்தில் உள்ள பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவர்களே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள்.

இயேசுவின் மற்ற கூற்றுகள் இந்த சத்தியத்தை விவரிக்கின்றன:

> தேவனுடைய வசனத்தைக் கேட்டு, *அதின்படி செய்கிறவர்களே* எனக்குத் தாயும் எனக்குச் சகோதரருமாயிருக்கிறார்கள் (லூக்கா 8:21; என்னால் வலியுறுத்தப்படுகிறது; மத்தேயு 12:50யும் காணவும்).

> தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, *அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே* அதிக பாக்கியவான்கள் (லூக்கா 11:28; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

> குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்: குமாரனுக்கு *கீழ்ப்படியாதவனோ* ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் (NASB; *யோவான் 3:36; என்னால் வலியுறுத்தப்படுகிறது).*

> *என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும். நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்கவேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார். அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்: ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் (யோவான் 12:48-50).*

இயேசு தமது போதனையைப் பிதாவின் வார்த்தைகளுடன் மட்டுப்படுத்திக் கொள்வதில் எச்சரிக்கையாக இருந்தார். இந்த வார்த்தைகளை அவர் பரிசுத்த ஆவியானவருக்குக் கொடுத்தார், அவர் தமது சொந்தத்தில் பேசாமல், அவருக்கு இயேசு கொடுத்தவற்றை மாத்திரம் பேசினார் (யோவான் 16:14). இன்றைய நாட்களில் இயேசுவின் நாமத்தில் போதிக்கிறவர்கள் அதையே செய்ய வேண்டும் என்று இயேசு எதிர்பார்க்கிறார். வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவன் *சபிக்கப்பட்டவனாயிருக்கிறான்* (கலாத்தியர் 1:8, 9).

இரட்சிப்பும் தேவனுடனான நமது உறவும், நாம் தேவனுடைய சித்தத்தின்படி செய்வதைச் சார்ந்துள்ளது. நாம் நமது சொந்த விருப்பத் தின்படி அவருக்கு ஊழியம் செய்யும் உரிமையை அவர் நமக்குக் கொடுத்திருக்கவில்லை.

> தேவனுடைய கற்பனைகளைக் *கைக்கொள்ளுகிறதே* காரியம் *(1 கொரிந்தியர் 7:19ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது).*

> *தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ* என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் *(1 யோவான் 2:17; என்னால் வலியுறுத்தப்படுகிறது).*

கீழ்ப்படிதல்தான் தேவனைப் பிரியப்படுத்துகிறது. நாம் அவர் கட்டளையிட்டுள்ளவற்றை எவ்வாறு செய்ய வேண்டும் என்று அவர் உரைத்தி ருக்கிறாரோ, அவ்வாறு செய்தால் மாத்திரமே அவர் நம்மை ஏற்றுக்கொள்கிறார். *நாம்* என்ன செய்ய விரும்புகிறோமோ அதையோ அல்லது அவரது கேட்புகளைப் பற்றி *நாம்* என்ன நினைக்கிறோமோ அதையோ நாம் செய்யும்படி அவர் நம்மிடத்தில் கேட்பதில்லை என்று வேத வசனங்களிலுள்ள உதாரணங்கள் சித்தரிக்கின்றன.

தேவனைப் பிரியப் படுத்துவதற்கு நாம், அவரது வசனத்தில் விசுவாசம் கொண்டிருக்க வேண்டும். இந்த விசுவாசம் அவருக்குக் கீழ்ப்படிதலில் வெளிப்படுத்தப்பட வேண்டும். வேறுவிதமாகச் செயல்படுதல் என்பது தேவனுக்கு எதிரான கலகமாக இருக்கிறது.